# பிரபந்தசாரம்

ஸ்ரீ:
ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த ஸ்ரீ தேசிக ப்ரபந்தம்

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

பிரபந்தசாரம்

ஆரண நான்கின் பொருளை ஆழ்வார்கள் ஆய்ந்தடைவே*
அன்புடனே அம்புவியோர் அனைவரும் ஈடேறவென்று*
நாரணனுர் தாள்களிலே நாலாயிரம் தமிழால்*
நண்ணியுரை செய்தவற்றை நாடிவகை தொகைசெய்தாய்*
பூரணமா ஞானியர்சேர் பொங்குபுகழ்த் தூப்புல்வரும்*
புனிதனென்றும் பிள்ளையென்றும் புவியோர்புகழ் வேங்கடவா*
தாரணியோர் இங்கு உகக்க சாற்றிய நல் ப்ரபந்தசாரம்*
தனையுரைத்து வாழும் மனம் தந்தருளாய் என்றனக்கே.

ஆதிமறை ஓதிமகிழ் ஹயக்கிரீவர் தம்மருளால்*
அன்புடனே தூப்புல் நகர் அவதரித்து இங்குவந்து*
வாதியரை வென்றுவந்து வன்புவிமேல் எதிராசர்*
வாழ்வுறு நல் தரிசனத்தை வண்மையுடனே வளர்த்து*
நீதிநெறி தவருமல் நிறுத்தியிடும் வேங்கடவா*
நேசமுடன் ஆழ்வார்கள் நிலைகளையெல்லாம் உணர்ந்து*
சாதுசனம் வாழவென்று சாற்றியநற் ப்ரபந்தசாரம்*
தனையுரைத்து வாழும் மனம் தந்தருளாய் என்றனக்கே.

1:## ஆசார்யவந்தனம்

ஆழ்வார்கள் அவதரித்த நாளூர் திங்கள்*
அடைவு திருநாமங்கள் அவர் தாம் செய்த*
வாழ்வான திருமொழிகள் அவற்றுள் பாட்டின்*
வகையான தொகையிலக்கம் மற்றும் எல்லாம்*
வீழ்வாக மேதினிமேல் விளங்க நாளும்*
விரித்துரைக்கும் கருத்துடனே மிக்கோர் தங்கள்*
நீள்பாதம் நிரந்தரமும் தொழுது வாழ்த்தும்*
நேசமுடன் அடியேன் தன் நெஞ்சு தானே.

2: பொய்கையாழ்வார்:

அருள்மிகுத்த ஒருவடிவாய்க் கச்சி தன்னில்*
ஐப்பசி மாதத் திருவோணத்து நாளில்*
பொருள்மிகுத்த மறைவிளங்கப் புவியோர் உய்யப்*

பொய்கைதனில் வந்துதித்த புனிதா! முன்னாள்*
இருளதனில் தண்கோவலிடை கழிச்சென்று*
இருவருடன் நிற்கவும் மாலிடை நெருக்க*
திருவிளக்காமென வையந் தகளி நூறும்*
செழும்பொருளை எனக்கருள்செய் திருந்த நீயே.

3: பூதத்தாழ்வார்:

கடன்மல்லை காவலனே! பூத வேந்தே!*
காசினிமேல் ஐப்பசியில் அவிட்ட நாள்வந்து*
இடர்க்கடியுந் தண்கோவல் இடைகழிச்சென்று*
இணையில்லா மூவருமாய் இசைந்தே நிற்க*
நடுவில் அவர் ஒருவரும் என்றறியா வண்ணம்*
நள்ளிருளில் மால் நெருக்க நந்தா ஞானச்-
சுடர்விளக்கேற்றிய* அன்பே தகளியான-
தொடை நூறும்* எனக்கருள்செய் துலங்க நீயே.

4: பேயாழ்வார்:

மாமயிலைப் பதியதனில் துலா மாதத்தில்*
வரும் சதயத்து அவதரித்துக் கோவலூரில்*
தூமுனிவர் இருவருடன் துலங்க நின்று*
துன்னிய பேரிருள் நீங்கச் சோதி தோன்ற*
சேமமுடன் நெடுமாலைக் காணப் புக்குத்*
திருக்கண்டேன் எனவுரைத்த தேவே!* உன்தன்-
பாமருவு தமிழ்மாலை நூறு பாட்டும்*
பழவடியேன் எனக்கருள்செய் பரம நீயே.

5: திருமழிசையாழ்வார்:

தைமகத்தில் வருமழிசைப் பரனே!* மற்றைச்-
சமயங்கள் பல தெரிந்து* மாயோனல்லால்-
தெய்வம் மற்றில்லையென உரைத்த* வேதச்-
செழும்பொருள் நான்முகன் தொண்ணூற்றாறு பாட்டும்*
மெய்ம்மிகுத்த திருச்சந்த விருத்தப் பாடல்*
விளங்கிய நூற்றிருபதும் தப்பாமல்* மெய்யே-
வையகத்தில் மறவாமல் உரைத்து வாழும்-
வகை* அடியேனுக்கருள் செய் மகிழ்ந்து நீயே.

6:## நம்மாழ்வார்:

முன்னுரைத்த திருவிருத்தம் நூறு பாட்டும்*
முறையில் வரும் ஆசிரியம் ஏழு பாட்டும்*
மன்னிய நற்பொருள் பெரிய திருவந்தாதி*
மறவாதபடி எண்பத்தேழு பாட்டும்*
பின்னுரைத்ததோர் திருவாய் மொழி* எப்போதும்-

பிழையற ஆயிரத்தொரு நூற்றிரண்டு பாட்டும்*
இந்நிலத்தில் வைகாசி விசாகம் தன்னில்*
எழிற்குருகை வருமாறு! இரங்கு நீயே.

7: மதுரகவி ஆழ்வார்:

தேறிய மாஞானமுடன் திருக்கோளூரில்*
சித்திரையில் சித்திரைநாள் வந்து தோன்றி*
ஆறிய நல்லன்புடனே குருகூர் நம்பிக்கு*
அனவரதம் அந்தரங்க அடிமை செய்து*
மாறனையல்லால் என்றும் மறந்தும்* தேவு-
மற்றறியேன் என்னும் மதுர கவியே!* நீமுன்-
கூறிய கண்ணிநுண்சிறுத்தாம் பதனில் பாட்டு*
குலவு பதினொன்றும் எனக்கு உதவு நீயே.

8: குலசேகராழ்வார்:

பொன்புரையும் வேல் குலசேகரனே* மாசிப்-
புனர்ப்பூசத்து எழில்வஞ்சிக் களத்தில் தோன்றி*
அன்புடனே நம்பெருமாள் செம்பொற் கோயில்*
அனைத்துலகின் பெருவாழ்வும் அடியார் தங்கள்*
இன்பமிகு பெருங்குழுவுங் காண* மண்மேல்-
இருளிரிய வென்றெடுத்த இசையில் சொன்ன*
நன்பொருள்சேர் திருமொழி நூற்றைந்து பாட்டும்*
நன்ருக எனக்கருள் செய் நல்கி நீயே.

9: பெரியாழ்வார்:

பேரணிந்த வில்லிபுத்தூர் ஆனி தன்னில்*
பெருஞ்சோதிதனில் தோன்றும் பெருமானே* முன்-
சீரணிந்த பாண்டியன் தன் நெஞ்சு தன்னில்*
துயக்கற மால் பரத்துவத்தை திறமாச் செப்பி*
வாரணமேல் மதுரைவலம் வரவே* வானில்-
மால் கருட வாகனனுய்த் தோன்ற வாழ்த்தும்*
ஏரணி பல்லாண்டுமுதற் பாட்டு* நானூற்று-
எழுபத்து ஒன்றிரண்டும் எனக்கு உதவு நீயே.

10:## கோதைப்பிராட்டி:

வேயர்ப்புகழ் வில்லிபுத்தூர் ஆடிப் பூரம்*
மேன்மேலும் மிகவிளங்க விட்டு சித்தன்*
தூய திருமகளாய் வந்து அரங்கனுர்க்குத்*
துழாய்மாலை முடிசூடிக் கொடுத்த மாதே*
நேயமுடன் திருப்பாவைப் பாட்டு ஆறைந்தும்*
நீயுரைத்த தையொரு திங்கள் பாமாலை*
ஆயபுகழ் நூற்று நாற்பத்து மூன்றும்*

அன்புடனே அடியேனுக்கு அருள்செய் நீயே.

11: தொண்டரடிப்பொடியாழ்வார்:

மன்னுமதிள் திருமண்டங் குடிதான் வாழ*
மார்கழிமாத கேட்டை நாளில் வந்து*
துன்னுபுகழ்த் தொண்டரடிப் பொடியே* நீ முன்–
துழாய்மாலைப் பணியடிமை செய்து நாளும்*
தென்னரங்க மணவாளற் கன்பு மிக்குச்–
செப்பிய* நல் திருமாலை நாற்பத்தைந்தும்*
பன்னியநல் திருப்பள்ளியெழுச்சி பத்தும்*
பழவடியேனுக்கருள் செய் பரிந்து நீயே.

12: திருப்பாணழ்வார்:

உலகறிய மலிபுகழ்க் கார்த்திகை மாதத்தில்*
உரோகிணிநாள் உறந்தைவளம் பதியில் தோன்றி*
தலமளந்த தென்னரங்கர் பால்* உலோக–
சாரங்க மாமுனி தோள்தனிலே வந்து*
பலமறையின் பொருளால் பாண் பெருமாளே* நீ–
பாதாதி கேசமதாய்ப் பாடித் தந்த*
சொல் அமலனாதிபிரான் பத்து பாட்டும்*
சோராமல் எனக்கருள்செய் துலங்க நீயே.

13:## திருமங்கை ஆழ்வார்:

அறிவுதரும் பெரியதிருமொழி தப்பாமல்*
ஆயிரத்தோடு எண்பத்து நாலு பாட்டும்*
குறியதொரு தாண்டகம் நாலைந்து* ஆறைந்து–
குலாநெடுந்தாண்டகம் எழுகூற்றிருக்கை ஒன்றும்*
சிறியமடல் பாட்டு முப்பத்து எட்டிரண்டும்*
சீர்ப்பெரிய மடல் தனில் பாட்டு எழுபத்தெட்டும்*
இறையவனே கார்த்திகையில் கார்த்திகை நாள்*
எழிற்குறையல் வரும்கலியா இரங்கு நீயே.

14:## ஸ்ரீபாஷ்யகாரர்: (திருவரங்கத்தமுதனார்)

தேசமெலாம் உகந்திடவே பெரும்பூதூரில்*
சித்திரையில் ஆதிரைநாள் வந்து தோன்றிக்*
காசினிமேல் வாதியரை வென்று* அரங்கர்–
கதியாக வாழ்ந்தருளும் எதிராசா* முன்–
பூசுரர்க்கோன் திருவரங்கத் தமுதனார்* உன்–
பொன்னடி மேல் அந்தாதியாகப் போற்றிப்–
பேசிய* நற்கலித்துறை நூற்றெட்டுப் பாட்டும்*
பிழையறவே யெனக்கருள்செய் பேணி நீயே.

15:
எண்ணின் முதலாழ்வார்கள் மூன்று நூறும்*
எழில் மழிசைப் பிரான் இருநூற்றொரு பத்தாறும்*
உண்மைமிகு மாறன்மறை ஆயிரத்தோடு–
உற்ற* இரு நூற்றுத் தொண்ணூறும் ஆறும்*
வண்மையுடை மதுரகவி பத்து மொன்றும்*
வஞ்சியர்க்கோன் நூற்றைந்தும்* பட்ட நாதன்–
பண்ணிய நானூற்று எழுபத்து மூன்றும்*
பார்க்கோதை நூற்றெழு பத்து மூன்றே.

16:
பத்தரடிப் பொடிபாடல் ஐம்பத்தைந்தும்*
பாணர்புகழ் பத்துடனே பரகாலஞ்சொல்*
அத்தனுயர் வேங்கடமாற்கு ஆயிரத்தோடு–
ஆன* இரு நூற்ருேர் ஐம்பத்து மூன்றும்*
முத்திதரும் எதிராசர் பொன்னடிக்கே*
மொழிந்த அமுதர் பாடல் நூறுமெட்டும்*
எத்திசையும் வாழ இவர் பாடி வைத்த–
இவை* நாலாயிரமும் எங்கள் வாழ்வே.

17:##
வையகமெண் பொய்கை பூதம் பேயாழ்வார்*
மழிசையர்க்கோன் மகிழ்மாறன் மதுரகவி*
பொய்யில்புகழ் கோழியர்க்கோன் விட்டுசித்தன்*
பூங்கோதை தொண்டரடிப்பொடி பாணுழ்வார்*
ஐயனருட் கலியன் எதிராசர் தம்மோடு*
ஆறிருவர் ஓரொருவர் அவர்தாம் செய்த*
துய்ய தமிழ் இருபத்து நான்கின் பாட்டின்–
தொகை* நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே.

18:##
அந்தமிலா ஆரணங்கள் நாலாய் நின்ற*
அதன்கருத்தை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்து*
செந்தமிழால் அருள்செய்த வகை தொகையும்*
சிந்தாமல் உலகங்கள் வாழவென்று*
சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும்*
வேதாந்த குருமொழிந்த ப்ரபந்த சாரம்*
சிந்தையினுல் அனுதினமும் சிந்திப் போர்க்குச்*
சேமமதாம் திருமால் தன் கருணையாலே.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்